

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் நேற்று (9.2.2026) இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 9,000 கோடி ரூபாய் முதலீட்டில் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் டாடா மோட்டார்ஸ் JLR நிறுவனத்தின் நவீன வாகன உற்பத்தி ஆலையின், முதல் அலகு 900 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டு திறந்து வைக்கப்பட்ட, ஆலையினை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, ஆர். காந்தி, முனைவர் டி.ஆர்.பி. ராஜா, எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.எம்.முனிரத்தினம், ஜெ.எல்.ஈஸ்வரப்பன், ஏ.பி. நந்தகுமார், டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவர் என். சந்திரசேகரன் மற்றும் நிறுவன நிர்வாகிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.2.2026) இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 9,000 கோடி ரூபாய் முதலீட்டில் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் டாடா மோட்டார்ஸ் JLR நிறுவனத்தின் நவீன வாகன உற்பத்தி ஆலையின், முதல் அலகு 900 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டு, இந்த ஆலையின் முதலாவது ஜாகுவார் லேண்ட் ரோவர் (JLR) சொகுசு வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நேற்று (9.2.2026) இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 9,000 கோடி ரூபாய் முதலீட்டில் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் டாடா மோட்டார்ஸ் JLR நிறுவனத்தின் நவீன வாகன உற்பத்தி ஆலையின், முதல் அலகு 900 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டு திறந்து வைக்கப்பட்ட, ஆலையினை பார்வையிட்டார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.2.2026) இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் நடைபெற்ற டாடா மோட்டார்ஸ் JLR நிறுவனத்தின் நவீன வாகன உற்பத்தி ஆலை திறப்பு விழாவில், டாடா குழுமத்தின் முன்னாள் தலைவர் ரத்தன் டாடா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன், டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவர் என். சந்திரசேகரன் அவர்கள் உள்ளார்.

## இராணிப்பேட்டை - பனப்பாக்கம் தொழிற்பூங்காவில்

# டாடா மோட்டார்ஸ் நிறுவன நவீன வாகன உற்பத்தி ஆலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து சிறப்புரை!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.2.2026) இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 9,000 கோடி ரூபாய் முதலீட்டில் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் டாடா மோட்டார்ஸ் JLR நிறுவனத்தின் நவீன வாகன உற்பத்தி ஆலையின், முதல் அலகு 900 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டு, இந்த ஆலையின் முதலாவது ஜாகுவார் லேண்ட் ரோவர் (JLR) சொகுசு வாகனத்தை இயக்கினார். உடன், டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவர் என். சந்திரசேகரன் அவர்கள் உள்ளார்.

**இராணிப்பேட்டை, பிப்.10-**

**இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் ரூ.9,000 கோடி முதலீட்டில் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் டாடா மோட்டார்ஸ் JLR நிறுவனத்தின் நவீன வாகன உற்பத்தி ஆலையின் முதல் அலகு ரூ.900 கோடி செலவில் நிறுவப்பட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் நேற்று (9.2.2026) இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்கா வில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 9,000 கோடி ரூபாய் முதலீட்டில் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் டாடா மோட்டார்ஸ் JLR நிறுவனத்தின் நவீன வாகன உற்பத்தி ஆலையின், முதல் அலகு 900 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் உலகளாவிய மற்றும் இந்தியாவின் முன்னணி நிறுவனங்களின் முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் 2030க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு மாற்றம் பெற வேண்டும் என்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களது இலட்சிய இலக்கினை விரைவில் எய்துவதற்கு ஏதுவாக தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. அதன் விளைவாக தமிழ்நாடு, இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சியில் முதன்மை மாநிலமாகவும், வாகனங்கள், மின்னணு, ஆயத்த ஆடைகள், தோல் பொருட்கள் உள்ளிட்ட பல்வகைப்பட்ட உற்பத்தித் துறைகளில் முன்னணி மாநிலமாகவும் வளர்ச்சி பெற்றுள்ளது. மேலும், ஈர்க்கப்படும் தொழில் திட்டங்கள் மாநிலம் முழுவதும் பரவலாக அமைக்கப்பட்டு, இலட்சக்கணக்கான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, பெண்களுக்கான வேலைவாய்ப்பு பெருமளவில் உருவாக்கப்பட்டதன் காரணமாக தொழிற்சாலைகளில் பணிபுரியும் மொத்த பெண்களில் 41 சதவிகித பங்களிப்பை தமிழ்நாடு கொண்டுள்ளது.

### டாடா குழுமம்

மோட்டார் வாகனங்கள், மின்னணுவியல், எஃகு, தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உலகளவில் டாடா குழுமம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அக்குழுமத்தின் துணை நிறுவனங்களான டிசிஎஸ், டைடன், டாடா பவர், டாடா எலெக்ட்ரானிக்ஸ், தாஜ் ஹோட்டல்கள் ஆகியவை ஏற்கெனவே தமிழ்நாட்டில் செயல்பட்டுவருகின்றன. அதன் தொடர்ச்சியாக, தற்போது, டாடா குழுமத்தின் ஒரு அங்கமான டாடா மோட்டார்ஸ் JLR நிறுவனம் அதிநவீன மின்வாகன உற்பத்தி ஆலையை தமிழ்நாட்டில் அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### டாடா மோட்டார்ஸ் JLRநிறுவனத்தின் அதிநவீன மின்வாகன உற்பத்தி ஆலை திறப்பு

டாடா மோட்டார்ஸ் JLR நிறுவனம், 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் தமிழ்நாட்டில் வாகன உற்பத்திக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. அதே ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் உற்பத்தி ஆலை அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த ஆலையின் முதல் அலகு நிறுவும் பணிகள் 16 மாதங்களில் விரைந்து முடிக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் தற்போது திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இது புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு துரிதமாக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். உலகப் புகழ் பெற்ற ஜாகுவார் லேண்ட் ரோவர் (JLR) சொகுசு வாகனங்கள் உற்பத்தி செய்யப் படவுள்ள இவ்வாலையின் முதலாவது வாகனம் இன்று வெளியிடப்பட்டது.

டாடா மோட்டார்ஸ் JLR நிறுவனத்தின் நவீன வாகன உற்பத்தி ஆலை திறப்பு விழாவில், முதலமைச்சர் அவர்கள் டாடா குழுமத்தின் முன்னாள் தலைவர் ரத்தன் டாடா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். பின்னர், உற்பத்தியை ஆலையை திறந்து வைத்து, பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து, இந்த ஆலையின் முதலாவது ஜாகுவார் லேண்ட் ரோவர் (JLR) சொகுசு வாகனத்தை இயக்கியதுடன், கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.எம். முனிரத்தினம், ஜெ.எல்.ஈஸ்வரப்பன்,

ஏ.பி. நந்தகுமார், டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவர் என். சந்திரசேகரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி. அருண் ராய், சிப்காட் நிறுனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கி.செந்தில்ராஜ், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, டாடா மோட்டார்ஸ் குழுமத்தின் தலைமை நிதி அலுவலர் பி.பி. பாலாஜி, டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சைலேஷ் சந்திரா, JLR நிறுவனத்தின் இயக்குநர் ஃப்ராங்க் லூத்விக் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கேள்விக் கென்ன பதில் ?

**பாமரன் :**

'வாய் கிழியப் பேசுவது' பற்றி எடப்பாடி சொல்லியிருக்கிறாரே; வாய் கிழியப் பேசுவது என்றால் என்ன ?

**பதில்:**

**வாய் கிழியப் பேசுவது என்றால், வாய்மை என்று ஒன்று இருப்பதையே மறைத்துவிட்டு, வாயே கொள்ள முடியாத பெரிய பெரிய பொய்களையே, காது கொள்ள முடியாத அளவுக்குக் கொட்டித் தீர்ப்பது.**

**"தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவத்தைத் தொலைக்காட்சியில் பார்த்துத்தான் தெரிந்து கொண்டேன்" என்று உளறி;**

**கூவத்தூரில் தன்மானத்தைக் காவு கொடுத்துவிட்டு, ஏதோ தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரைப் போல, விண்ணுக்கும் மண்ணுக்கும் எகிறிக் குதித்து,**

**புருடாக்களையும் வெற்றுச் சவடால்களையும் ஊர்தோறும் உதிர்த்து;**

**கம்ப ராமாயணத்தை இயற்றியவர் சேக்கிழார் என்று தனது அறிவீனத்தை அனைவர்க்கும் காட்சிப் பொருளாக்கி;**

**உண்மைகளை நொறுக்கி, உளறிக் கொட்டும் எடப்பாடி, வாய் கிழியப் பேசுவதற்கு முக்கிய உதாரண புருஷர் !**